# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | ஆண்டவரின் திருக்காட்சி விழா | 04 ஜனவரி 2026


**ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்குரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்**

*மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்*

மாதாந்திர நோக்கம்: குடும்பம்: நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்புதல்

# ஒளி தோன்றியுள்ளது

ஒளியைப் பற்றிய இறைவாக்கு ஒரு தெய்வீக முன்முயற்சியை எதிரொலிக்கிறது. கடவுளின் ஒளியைப் பற்றி எசாயாவின் இறைவாக்கு உலக நாடுகளுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகும். நற்செய்தி விளக்கவுரையில் இந்த காட்சி நிறைவேறுவதை நாம் காண்கிறோம். பெத்லகேமில் உள்ள மாட்டுத்தொழுவத்தில் உள்ள குழந்தை அனைத்து மக்களுக்கும் வந்திருக்கும் ஒளியின் ஆதாரமாக வெளிப்படுத்தப்படுகிறது. இது ஆண்டவரின் திருக்காட்சி. இதை நாம் பெருவிழாவாகக் கொண்டாடுகிறோம்.



Image: pinterest.com

நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்புவதற்கான மேய்ப்புப்பணி பாதைகளை நாம் தேடும்போது, இறைவேண்டல்கள், உரையாடல்கள் மற்றும் செயல்களில் வெளிப்படுத்தும் நம்பிக்கையை இன்றைய வாசகங்களிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவது என்ன? ஞானிகளின் வருகையை நாம் சிந்திப்போம். அவர்களின் பயணம் நம்பகத்தன்மையின் சாரத்தை எடுத்துக்காட்டுகிறது. தெரியாவதவற்றில் துணிச்சலான நம்பிக்கையின் பாதையை தேர்ந்தெடுத்து, தங்களின் அறிவியலையும் விண்வெளி ஆராய்ச்சியையும் பயன்படுத்தி, தங்களைவிட உயர்ந்த ஒன்றைத் தேடுகிறார்கள். இறுதியில் அவர்களை குழந்தை இருந்த இடத்திற்கு கூட்டி வந்த விண்மீனைப் பின்பற்றுவதன்மூலம் ஞானிகள் கடவுளின் வழிகாட்டுதலில் நம்பகத்தன்மையை வெளிப்படுத்துகிறார்கள். மாட்சிமிக்க அடையாளத்தைக் கொண்டிருப்பதில் கூர்மையான வித்தியாசமும், ஒரு தாழ்ச்சியான மாட்டுத்தொழுவத்தின் யாதார்த்தமும், குழந்தையின் முன் நெடுஞ்சாண்கிடையாக வணங்குவதற்கும் தங்களுடையப் பேழைகளைத் திறந்து எசாயா குறிப்பிட்டுள்ளதுபோல பொன், தூபம், மற்றும் வெள்ளைப் போளத்தை வழங்குவதற்கும் எதுவும் அவர்களைத் தடுக்கவில்லை. மாட்டுத்தொழுவத்தில் நடந்த சந்திப்பிற்குப் பிறகு ஏரோதிடம் மீண்டும் செல்லவேண்டாம், வேறுவழியில் தங்கள் நாடு திரும்பவேண்டும் என்று அவர்களை எச்சரித்த கனவையும் நம்புகிறார்கள்.

குடும்பத்தை மையமாகக் கொண்டு இந்தப் புதிய ஆண்டைத் தொடங்கும்போது, திருக்காட்சி கதை நமக்கு சில வழிகாட்டுதல்களை வழங்குகிறது. நம்பிக்கையின் வலுவான சாட்சி குடும்பத்தில் தான் தொடங்குகிறது. மேலும் இளம் தம்பதிகள் தங்கள் வாழ்க்கையை ஒன்றாகக் கட்டியெழுப்ப முன்வரும்போது பெரும்பாலும் சவால்களுடன் தான் வருகின்றனர். திருமணத்திற்கு பின் தேனிலவை முடித்துவிட்டு யாதார்த்த வாழ்வுக்குள் மூழ்கத்தொடங்கும்போது, வீட்டு வேலைகள், குழந்தைகள், பொருளாதாரம், கல்வித்தேவைகள், சமூகங்களின் அழுத்தம் என பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. இருந்தபோதும், **வீடு தான் நம்பகத்தன்மையின் முதல் பள்ளி. இங்கு தான் நாம் பணிவு, மன்னிப்பு, நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்புதல், ஒருவருக்கொருவர் சார்ந்திருத்தல் ஆகியவற்றைக் கற்றுக்கொள்கிறோம்.** கடவுள் அவர்களை வழிநடத்த பயன்படுத்தப்படும் அறிகுறிகளைப் புரிந்துகொண்டு, கற்றுக்கொள்வதன்மூலம், குடும்ப உறுப்பினர்கள் கிறிஸ்துவை மையமாகக் கொண்டிருக்க வலுவான இறைவேண்டல் வாழ்க்கை உதவுகிறது.

திருஅவை என்ற பெரியகுடும்பத்தைப் பொறுத்தவரை, கடவுள் தம்மை எல்லா மக்களுக்கும் வெளிப்படுத்துகிறார் என்பதை ஞானிகளின் கதை காட்டுகிறது. கடவுளின் குடும்பம் இனத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல; மாறாக அவரது ஒளிக்கு பகிர்ந்துகொள்ளப்பட்ட மறுமொழியை அடிப்படையாக் கொண்டது. பல்வேறு இனங்கள் மற்றும் சமூகங்களுடன் திருஅவை கொண்டிருக்கும் உரையாடல் மற்றும் ஒத்துழைப்புகளை அறிந்துகொள்வது மகிழ்ச்சியளிக்கிறது. அடிக்கடி நடைபெறும் உரையாடல்கள் மூலம் கடவுளின் குடும்பம், இனம், சமயம், மற்றும் நம்பிக்கை ஆகிய தடைகளை உடைக்கிறது.

தோன்றியுள்ள ஒளி எல்லாச் சூழ்நிலைகளிலும் நம்மைத் தொடர்ந்து வழிநடத்தட்டும்.

Celebrate Listen Walk (cf. Lk 24:13-35)

MPC2026

**இன்றைய இறைவார்த்தை:**

எசாயா 60: 1-6
திருப்பாடல் 72: 1-2, 7-8, 10-13
எபேசியர் 3: 2-3, 5-6
மத்தேயு 2: 1-12

> குடும்பம் என்பது தலத்திருஅவை. அதில் நாம் மனிதர்களுக்கிடையேயான உறவுகளின் வளத்தை, அவர்களின் பன்முகத்தன்மையில் வாழக் கற்றுக்கொள்கிறோம்.
> (இறுதி ஆவணம் எண்:35)


INTERNAL CIRCULATION ONLY
BUL 01/2026

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org